**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.97/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொன்னுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : அண்ணாமலை | ஜாதி | : -- |
| வயது | : 74 | கிராமம் | : அம்மையார்குப்பம் |
| தொழில் | : ஆசிரியர் (ஓய்வு) | வட்டம் | : திருத்தணி |

**17.10.2025**

**<u>வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததால் வந்தேன். நான்தான் அண்ணாமலையின் மகன் என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அண்ணாமலை எந்த மாதம், எந்த வருடம், தேதியில் கிரையம் வாங்கியுள்ளார் என்பது தெரியுமா என்றால் 19.08.1991ல் கிரையம் வாங்கியுள்ளார். நான் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் ஆமாம். நான் எத்தனையாவது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் 2ம் சாட்சியாவேன்.

2. சாட்சி கையெழுத்து செய்யும் முன்பு அதில் உள்ள சரத்துகளை படித்து பார்த்து புரிந்து கையெழுத்து செய்துள்ளேனா என்றால் வாதி சிதம்பரம் படித்து காண்பித்தார். அந்த கிரைய ஆவணத்தை யார் படித்து காண்பித்தார் என்றால் நானும் படித்தேன், ஆவண எழுத்தரும் படித்து காண்பித்தார். ஆவண எழுத்தரின் பெயர் என்ன என்றால் ஞாபகமில்லை. கிரைய ஆவணத்தில் உள்ள புல எண், மனை எண் தெரியுமா என்றால் 3ம் மனை எண் என நினைக்கிறேன். சரியாக தெரியவில்லை. 3ம் மனை எண்ணின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் 1400 சதுரடியாகும். 3ம் மனையின்

எந்த பக்கம் 1400 சதுரடி என்றால் வடக்கு பக்கம் ஆகும். 3ம் மனையின் மொத்த விஸ்தீரணம் 2800 சதுரடி என்பது தெரியுமா என்றால் தெரியும்.

3. வழக்கு என்ன பிரச்சனைக்காக தாக்கல் செய்யப்பட்டது என்பது தெரியுமா என்றால் சிதம்பரம் சொத்தில் பிரபாவதியம்மாள் பிரச்சனை செய்வதால் சிதம்பரம் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கும் எனக்கும் ஏதாவது உறவு முறை உள்ளதா என்றால் இல்லை. பக்கத்து பக்கத்து வீட்டில் பெண் எடுத்துள்ளோம். நானும் வாதியும் உறவா என்றால் பெண் எடுத்த வகையில் பங்காளிகள் ஆவோம். நானும் வாதியும் உறவினர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)